பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 26 (8—5—68) புதன் ★ வெளியூர்: சித்திரை 27 (9—5—68) வியாழன் [இதழ்: 271

இதுவா பதில்?

மதுரை, மே 8—

"மதுரையில் வானொலி நிலையம் அமைப்பது, அனைத்திந்திய வானொலியின் எதிர்காலத் திட்டங்களில் ஆலோசிக்கப்படும். அந்த எதிர்காலத் திட்டங்கள் தீட்டப்படும்போது மதுரையின் கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படும்"

என்று மதுரை—இராமநாதபுரம் மாவட்ட வணிகச் சங்கத்திற்கு எழுதியுள்ள பதில் கடிதமொன்றில், மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சர் கே. கே. ஷா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு ஒளிமிகு எதிர்காலம்!

சிக்கல்கள் பல இருப்பினும் அவற்றை திறமையாக சமாளிக்கிறோம்

அறிஞர் அண்ணாவின் நன்னம்பிக்கை -- ஜப்பான் வெளிநாட்டு அமைச்சரிடம் விளக்கம்

டோக்கியோ, மே 8 -

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று காலை, ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சர் திரு. மிகியைச் சந்தித்து அளவளாவினார்.

இந்தியாவுக்குப் பல்வேறு சிக்கல்கள் இருந்தபோதிலும், அவற்றையெல்லாம் திறமையுடன் சமாளித்து உறுதியான நிலையை அடைந்துள்ளதாகவும், இந்தியாவின் எதிர்காலம் நல்ல ஒளிமிக்கதாகத் திகழும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அண்ணா அவர்கள், அமைச்சர் மிகியுடன் பேசுகையில் தெரிவித்தார்.

நீண்ட நெடுங்காலப் பிரச்சினைகளாயிற்றே!

இந்தியாவில் உள்ள பெரிய பிரச்சினையான மொழிப் பிரச்சினையையும், பிற பிரச்சினைகளையும் திரு. மிகி குறிப்பிட்டு, 'இப்போதுள்ள நிலைமை என்ன' என்று கேட்டார்; அதற்குப் பதிலளிக்கும் வகையில் அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"இந்தப் பிரச்சினைகளெல்லாம் நீண்ட நெடுங்காலப் பிரச்சினைகளாகும். அந்தப் பிரச்சினைகளுடனேயே நாங்கள் வாழ்ந்து வருகிறோம்; அவற்றையும் நாங்கள் வெற்றி கொள்வோம்.

'உங்கள் ஜப்பான் நாடு, எவ்வளவோ எரிமலைகளின் சீற்றங்களுக்கிடையிலும் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது!"

'மனித எரிமலை'களை நாங்களும் பெற்றிருக்கிறோம்

அண்ணா அவர்கள் நகைச்சுவையாகப் பின்வருமாறு கூறினார்:—

"நீங்கள் பெற்றிருக்கும் எரிமலைகளைப் போலவே நாங்களும் 'மனித எரிமலை'களைப் பெற்றிருக்கிறோம். நீங்கள் எப்படி உங்கள் எரிமலைகளோடு பழக்கப்பட்டு அவற்றைச் சமாளிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறீர்களோ அப்படியே நாங்களும் சமாளிப்போம்."

வேற்றுமைக் கிடையில் ஒற்றுமை காண்கிறோம்!

இந்தியாவின் மொழிச் சிக்கல் பற்றிய திரு மிகியின் கேள்விக்கு அண்ணா பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இந்தியா ஒரு மாபெரும் நாடு; அது ஜப்பானைப்போல் அல்லாமல் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் அங்கு இருக்கின்றனர். இந்த வேற்றுமைகளுக்கிடையிலும் ஒற்றுமை கண்டு வருகிறோம்.

பல்வேறு மொழிகளைப் பேசும் நாங்கள் ஒற்றுமையாக வாழக் கற்றிருக்கிறோம். சில சிக்கல்கள் ஏற்படத்தான் செய்கின்றன; அவற்றைச் சமாளித்து வருகிறோம்."

முழு நம்பிக்கை இருக்கிறது--- எனவே முன்னேறுகிறோம்!

இந்தியாவின் எதிர்காலம் பற்றி அண்ணா குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. இந்தியாவில் பெரிய பிரச்சினைகள் இருந்தபோதிலும் அவற்றைச் சமாளித்து முன்னேறிக் கொண்டிருக்கிறோம்."

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றி அண்ணா தெரிவித்ததாவது:—

"இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அழுத்தமாக வேரூன்றிவிட்டது. இத்துறையில் தமிழ்நாடும், மகாராட்டிர மாநிலமும் முன்னேறிவருகின்றன."

கவலையுறுகிறார் மிகி!

"ஜப்பானிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அளவுக்கு மீறிய வெற்றி பெற்றுவிட்டதால், கவலைப்பட வேண்டியுள்ளது; எனவே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தளர்த்தவேண்டிய காலம் வந்துவிட்டது"

என்று அமைச்சர் மிகி, அண்ணாவிடம் கூறினார்.

"குடும்பக் கட்டுப்பாடு காரணமாக ஜப்பானில் தொழிலாளர் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது"

என்றும் அமைச்சர் மிகி, அண்ணாவிடம் தெளிவுற விளக்கினார்.

'பிரச்சினைகள் குறித்து இங்கு நான் விவாதிக்கமாட்டேன்'

"சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தவிர வேறு திட்டவட்டமான எந்தப் பிரச்சினை குறித்தும் நான் டோக்கியோவில் விவாதிப்பதற்கில்லை"

என்று அண்ணா அவர்கள், திரு. மிகியிடம் தெளிவுபடுத்தினார்.

தயாராக இல்லை!

இந்தச் சந்திப்பின்போது, சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு ஜப்பான் உதவுவது பற்றிய விவரங்கள், திரு. மிகியிடம் தயாராக இல்லை என்று கூறப்படுகிறது.

ஜி.டி. நாயுடு வீடுகள் சரியில்லையாம்

'டில்லிப் பெரியவர்'களின் 'ஜமீன் நோக்கு!'

இந்தியாவின் குடியிருப்பு வசதித் தேவையை மிகக் குறைந்த செலவில் நிறைவு செய்து தரும் நோக்கத்துடன், கோவை தொழிலறிஞர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் உருவாக்கித் தர முன்வந்துள்ள மலிவு விலை வீடுகள் டில்லிப் 'பெரிய மனிதர்'கட்குப் பிடிக்கவில்லையாம்!

'தொழில் நுணுக்க நிபுணர்கள்' எனப்படும் அந்தப் 'பெரிய மனிதர்'கள், டில்லியில் ஜி. டி. நாயுடு அவர்களால் மாதிரிக்குக் கட்டப்பட்ட வீடுகளைப் பார்வையிட்டனராம்; அவை பாதுகாப்பாகவோ, நீடித்து நிலைக்கக்கூடிய வகையிலோ, திட்டமிட்டுக் கட்டுவதற்கு உகந்த வகையிலோ இல்லை எனக் கூறிவிட்டனராம்!

மாடமாளிகைகளுக்கு நடுவே, 'டில்லி நவாப்பு'களாகத் தர்பார் நடத்திவரும் காங்கிரசு அமைச்சர்கட்கும், சாதாரண ஏழை யெளிய மக்களுக்கென உருவாக்கப்படும் ஜி டி நாயுடுவின் வீடு, மிகவும் அற்பமாகத் தென்படுகின்றனவாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

சரியான வழியில் செல்கிறோம்--- விரைவில் இலட்சியத்தை அடைவோம்

ஜப்பானிடமிருந்து பல பாடங்களைக் கற்போம்

இந்தியத் தூதரகத்தில் முதலமைச்சர் அண்ணா பேச்சு

டோக்கியோ, மே 7---

"நாம் சரியான வழியில் செல்கிறோம்; எனவே, நமது இலட்சியத்தை மிக விரைவில் அடைவோம்"

என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், ஜப்பானில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஊழியர்களடங்கிய கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்தியா, வெளிநாட்டு உதவிகளைப் பெரிதும் எதிர்பார்த்து நிற்கிறது; இந்த நேரத்தில் நல்ல ஒத்துழைப்பும், கூட்டுணர்ச்சியும் தேவை"

என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

சிறப்பான முன்னேற்றம்

அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது:—

"ஜப்பானின் வெற்றியும் முன்னேற்றமும் என்னை மிகவும் வியப்படையச் செய்துள்ளன.

நான் அமெரிக்காவைச் சுற்றிப் பார்த்துவிட்டு இப்போது திரும்பியுள்ளேன். அமெரிக்கரின் முன்னேற்றத்தைவிட ஜப்பானின் முன்னேற்றம் சிறப்பானதாகும்.

வளங்கள் ஏதும் இல்லையே -- எப்படித் தலைநிமிர்ந்தது?

ஏனெனில், அமெரிக்காவில் இயற்கை வளங்கள் நிரம்ப உண்டு; ஜப்பானில் அவை அறவே இல்லை.

ஜப்பானின் நிலப்பரப்பும் அமெரிக்காவைவிடச் சிறியது. கடந்த இரண்டாவது உலகப் போரில் படுதோல்விக்குள்ளாக்கப்பட்ட ஜப்பான் எப்படி இவ்வளவு முன்னேற்றத்தையடைந்தது?

எண்ணிப் பார்ப்பீர் --- அலட்சியம் வேண்டாம்

ஜப்பானின் வியக்கத்தக்க இந்த முன்னேற்றத்தை இந்தியர்கள்—குறிப்பாக இந்திய மாணவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்; இதனை அலட்சியமாகக் கருதிவிடக்கூடாது.

ஒவ்வொருவரும், தொண்டுணர்ச்சியோடு நமது நாட்டை விரைந்து முன்னேற்றுவிக்கத் தக்க வகையில் அறிவுக் கருத்துக்களைத் தேடிப் பெறவேண்டும்."

இந்திய மாணவரிடை!

அண்ணா அவர்கள் ஜப்பான் தூதரகத்தில் பேசுவதற்கு முன்னதாக, ஜப்பானில் உள்ள இந்திய மாணவர்கள் அடங்கிய குழு ஒன்று, அண்ணாவைக் கண்டு பேசியது.

அந்த மாணவர்களிடையே அண்ணா அவர்கள் பல்வேறு பொருள்கள் குறித்தும் நீண்ட நேரம் உரையாடிக்கொண்டிருந்தார்; அறிவுரைகள் பல வழங்கினார்.

தேசிய ஒற்றுமையை எவ்வாறு உருவாக்குவது?

"தேசிய ஒருமைப்பாடு போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகளைச் சிறிது காலத்திற்குத் தள்ளிப் போட வேண்டும்; ஆங்கிலத்தை நீடித்திருக்கச் செய்வதன் மூலமே ஒற்றுமையை உருவாக்க முடியும்"

என்றும் அண்ணா அவர்கள் கருத்தறிவித்தார்கள்.

கற்றுக்கொள்ள வேண்டியவை பல இருக்கின்றன!

ஒருமைப்பாடு குறித்து அறிவுரை வழங்குமாறு ஒரு மாணவர் கேட்டபோது, அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"இந்தியா ஒரு பெரிய நாடு; அங்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

ஜப்பானைப்போல அல்ல இந்தியா. ஜப்பானில் ஒருமைப்பாட்டுப் பிரச்சினையே கிடையாது.

ஜப்பானிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல இருக்கின்றன.

ஜப்பான் தனக்குள்ள பாதகமானவற்றையெல்லாம் சாதகமாக ஆக்கிக்கொண்டு முன்னேறி வருகிறது.

ஜப்பானிடமிருந்து நிலையான பாடங்கள் பலவற்றை நாம் கற்றுக்கொள்ள முடியும்."

ஆலை முதலாளிகளுக்கு அடிபணிந்துவிட்டது டில்லி!

நெருக்கடி நிலையைத் தவிர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கத் தயங்குவதேன்?

நாடாளுமன்றத்தில் தென்னக உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

புதுடில்லி, மே 6—

இங்கு நடைபெறவிருக்கும் தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவரும் தென் மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் நெசவாலைகள் பிரச்சினை குறித்து விவாதிக்க இருப்பதாக, வணிகத்துறை அமைச்சர் திரு. தினேஷ் சிங், நாடாளுமன்ற மக்களவையில் தெரிவித்தார்.

தென்னகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களான காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில், தொரராவ் பட்டீல், டி. என். பட்டோடியா, எம். சந்தோஷம், ஆர். உமாநாத் ஆகியோர் கொண்டுவந்த கவன ஈர்ப்புப் பிரச்சினைக்குப் பதிலளிக்கும் வகையில் வெளியிட்ட அறிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆலைகளில் ஏற்பட்டுள்ள சரக்குத் தேக்கத்தினாலேயே இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் தேக்கம் புதிதாக இப்போதுதான் ஏற்பட்டுள்ளது எனக் கூறமுடியாது என்றும் 1965-ஆம் ஆண்டிலே கூட இப்படி ஏற்பட்டிருக்கிறது என்றும், பிரச்சினையை மிகவும் சாதாரணமாக்கிப் பதிலளித்த அமைச்சர், இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை இரண்டொரு நாள் பொறுத்திருந்து பார்க்குமாறும் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரின் அறிக்கை, கவன ஈர்ப்புப் பிரச்சினை எழுப்பிய உறுப்பினர்கட்குத் திருப்தியளிக்கவில்லை.

"இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடிய அதிகாரம் எதுவும் இல்லாத முதலமைச்சர்களைக் கூட்டிப் பேசுவதன் மூலம் எவ்விதப் பலனும் ஏற்படப் போவதில்லை"

என்று இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. உமாநாத் கூறினார்.

"தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் கட்டளைக்கிணங்க, வாரத்தில் இரண்டு நாட்கள் ஆலைகள் மூடப்படுவதனால் கிட்டத்தட்ட 1,30,000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், எனவே உடனடியாக இந்நிலையைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்"

என்றும் உமாநாத் அவர்கள் வற்புறுத்தினர்.

"1965-ஆம் ஆண்டில்கூட இன்றுள்ளது போன்ற தேக்கம் ஏற்பட்டிருந்தது" என்று அமைச்சர் தினேஷ் சிங் கூறியது பற்றி, திரு. உமாநாத் கண்டனம் தெரிவித்தார்,

"அப்போது இதே அளவு நூல் தேங்கியிருந்திருக்கக் கூடும்; ஆனால் அதன் மதிப்பு 1965-ல் ரூ. 7 கோடி என்றால் இப்போது ரூ. 12 கோடியாகும்"

என்றார் உமாநாத்.

"அரசுக்கு அவ்விதம் அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை" என்று பதிலளித்தார் தினேஷ் சிங்.

அமைச்சர் தமது அறிக்கையைப் படித்து முடித்தவுடன் பல உறுப்பினர்கள் கேள்வி கேட்க எழுந்தனர்.

அறிக்கையைப் படித்துக் கொண்டிருக்கும்போதே கூட, கழக உறுப்பினரான தோழர் கந்தப்பன் எழுந்து,

"கவன ஈர்ப்புப் பிரச்சினைக்கு நாங்கள் பெற வேண்டிய பதில் இது தானா?"

என்று கேட்டார்.

"ஆலை முதலாளிகளுக்குப் பணிந்துவிட்டார் அமைச்சர்"

என்று குற்றஞ்சாட்டினார் திரு. முகம்மது இஸ்மாயில்; 'வாரத்தில் இரண்டு நாள் மூடப்படும் தென்னிந்திய ஆலைகளை, மத்திய அரசு தனது ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவ்வாறு செய்யாது தடுக்க முன்வருமா?" என்று அவர் கேட்டார்.

கடலுக்குள் இரண்டு திங்கள்!

அமெரிக்க விஞ்ஞானிகளின் திட்டம்

வாஷிங்டன், மே 6—

கடற்படுகையில் 4 அமெரிக்க விஞ்ஞானிகள் 60 நாட்கள் தங்குவார்கள்; வேலை பார்ப்பார்கள்.

நீர் மூழ்குவோர் யாரும் இவ்வளவு நெடுங்காலம் தொடர்ந்து கடலுக்கு அடியில் இருந்ததில்லை.

தொலைபேசி வழியாக மட்டிலுமே அவர்கள், வெளி உலகத் தொடர்பு கொண்டிருப்பார்கள்.

அடுத்த ஆண்டு பிப்ரவரியில் 15 மீட்டர் ஆழத்தில் கடற்படுகையிலுள்ள ஓர் ஆய்வுக்கூடத்தில் இந்த ஆராய்ச்சி தொடங்கும்.

கடல் மடியிலுள்ள கனி வளங்களையும், மீன் வளங்களையும் எடுத்துப் பயன்படுத்தும் நோக்கத்துடன் 1970-ம் ஆண்டுமுதல் 1980-ம் ஆண்டு முடிய பத்தாண்டு உலகக் கடல் ஆராய்ச்சி நடத்த குடியரசுத் தலைவர் ஜான்சன் வகுத்துள்ள திட்டத்தின்கீழ், மேற்குறிப்பிட்ட கடல் ஆராய்ச்சி விரிவுபடுத்தப்படும்.

திட்டத்தின்படி, அரசாங்கத்தின் விஞ்ஞானிகள் நால்வர் கடலுக்கடியில் வாழ்ந்து -- வேலை செய்வர். இதற்கென ஓர் இரட்டை அறை கட்டப்பட்டிருக்கிறது; வாயு அழுத்தம் ஒரே நிலையில் இருக்கும்வகையில் இதைத் தயாரித்துள்ளார்கள். ஓர் அறை பணிமனையாகவும், மற்றொன்று வீடாகவும் பயன்படும்.

இந்தியா பற்றிய திரைப் படம்

பிரிட்டிஷ் நிறுவனத்தின் தயாரிப்பு

இந்தியா, நேபாளம் ஆகிய இரு நாடுகளையும் பற்றிய செய்திப் படங்களை 'ரேங்க்' என்ற பிரிட்டிஷ் பட நிறுவனம் தயாரித்திருக்கிறது.

இந்தியா பற்றிய படங்கள் இந்தியாவின் சமுதாயப் பிரச்சினைகள், அதைத் தீர்ப்பதற்கான முயற்சிகள், ஏற்றுமதிப் பெருக்கத்தை ஊக்குவிக்கும் தொழில் வளர்ச்சி, இசை—நாடகம்—நாட்டியம், மற்றும் நம் நாட்டின் மத வழிபாடு ஆகியவற்றை விவரிக்கின்றன.

"இப்படங்களை எடுக்க இந்திய அரசு பெருமளவு வசதி செய்து கொடுத்தது" என்று அந்தப் பட நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினர்.

இவை தவிர, திபெத்திய அகதிகள் மறுவாழ்விற்காக வட இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் பற்றி மற்றுமொரு படம் இதே நிறுவனத்தார் தயாரித்துள்ளனர்.

ஓரிரு மாதங்களில் இப்படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளியிடப்படும். பிரிட்டனில் மட்டுமன்றி, உலகின் பல பாகங்களுக்கும் இச்செய்திப் படங்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

15,000 பேருக்குத் தண்டச் சம்பளம்!

மத்திய அரசு நிறுவனங்களில் கண்டுபிடிப்பு

புதுடில்லி, மே 6—

மத்திய அரசுக்குச் சொந்தமான 81 நிறுவனங்களில் மொத்தம் 15,000 ஊழியர்கள், தேவைக்கு மேல் அதிகப்படியாக இருக்கின்றனர் என்பது நிதித்துறை அமைச்சு எடுத்த ஒரு கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்திருக்கிறது.

மக்களவையில் கடிலிங்கண்ணு கௌடு என்பவர் கேள்விக்கு, நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் எழுத்து மூலம் அளித்த பதிலில் இத்தகவல் தரப்பட்டிருக்கிறது.

இப்படி அதிகப்படியாக உள்ள ஊழியர்களைப் புதிய திட்டங்களுக்கும், விரிவாக்கப்படும் திட்ட வேலைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகச் சில நிறுவனங்கள் அறிவித்துள்ளனவாம்.

"நிர்வாகச் சீர்திருத்தக் குழு கூட, இந்தப் பிரச்சினை தொடர்பாக சில பரிந்துரைகளைத் தெரிவித்துள்ளது; அந்தப் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன"

என்றும் நிதியமைச்சா மொரார்ஜி தேசாய் கூறினர்.

எதிர்க்கட்சியின் பொறுப்பற்ற செயல்கள்!

சென்னை, மே 7—

எதிர்க் கட்சி என்றால், ஆளும் கட்சியின் குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டியது நியாயம்; ஆனால் நியாயத்திற்கு விரோதமாக நடக்கிறார்கள்! நியாயமான குறைகளை எடுத்துச் சொல்ல முன் வருவதில்லை. 'ஏனோதானோ' என்று பொறுப்பற்ற முறையில் பேசுகிறார்கள்!

"தேர்தலுக்கு முன்பு எந்த நியாயத்திற்காக வாதாடினோமோ அவைகளை நடைமுறைப்படுத்தவே நாம் முயல வேண்டும்! மக்களிடம் எதையெதைக் கூறினோமோ அவற்றை செயலில் காட்ட வேண்டும்!

"காங்கிரசுக்காரர்கள் கேரளாவைச் சுட்டிக் காட்டி, 'பார்த்தீர்களா' என்னும் மிரட்டலுக்கு நாம் அஞ்சப்போவதில்லை!

"நமக்குப் பதவி பெரிதல்ல! அன்றைக்கு எப்படியிருந்தோமோ அதுபோலத்தான் இன்றைக்கும் இருக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கு இதை, பதவி ஏற்கும்போதே நினைவுப்படுத்தியிருக்கிறார்கள்! என்றைக்கும் நாங்கள் இதற்குத் தயாராக இருக்கிறோம்!

"ஆனால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளைக் கிடைக்கச் செய்யவேண்டும். எதை எதைச் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்யவேண்டும்; அதற்குத் தான் நாங்கள் பாடுபடுகிறோம்.

"தமிழ்நாட்டு மக்கள், எல்லா வகையிலும் முன்னேற்றமடைய நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம் -- உருவாக்கி வருகிறோம்; ஆனால் அதற்குப போதுமான பொருளாதாரம் நம்மிடம் இல்லை; அதற்கு மத்திய அரசு உதவ வேண்டும்; அதைச் செய்ய மத்திய அரசு முன்வர மறுக்கிறது.

"இதைச் சொன்னால், காங்கிரசுக்காரர்களுக்குக் கோபம் வருகிறது; 'ஆகா; டெல்லி மீது பழி போடுகிறார்களே' என்கிறார்கள்!

"'சட்டம், ஒழுங்கு போய்விட்டது' என்கிறார்கள்; எங்கே போய்விட்டது சட்டமும் ஒழுங்கும்?

"டெல்லியில்கூட மத்திய உள்துறை அமைச்சர் சவான் என்னிடம் கேட்டார்—'என்ன சட்டம்—ஒழுங்கு இல்லையாமே உங்கள் நாட்டில்?' என்று; நீங்கள் சொல்கிறீர்களா' என்று கேட்டேன்; 'இல்லை; சொல்லிக்கொள்கிறார்கள்' என்றார்!

"சட்டம் எங்கும் போய்விட வில்லை; ஆங்கிலேயர் காலத்திய சட்டமும் அப்படியே இருக்கிறது! காங்கிரசு ஆட்சிக் காலத்தில் போட்ட சட்டமும் அப்படியேதான் இருக்கிறது! அது எங்கும் போய் விடவில்லை! அதை எப்படியெப்படி அமுல்படுத்த வேண்டுமோ அதன்படி செய்துவருகிறோம்!

"ஆனால் இங்கே உள்ளவர்கள், 'கெட்டுவிட்டது-கெட்டுவிட்டது' என்று கூப்பாடு போடுகிறார்கள்! என்ன கெட்டுப் போய்விட்டது?

"இவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தபோதிலும் சரி; நாங்கள் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக—தமிழக மக்களின் நல்வாழ்வுக்காக—அது எப்படிப்பட்ட இடமாக இருந்தாலும்சரி—எவ்வளவு உயர்ந்தவராக இருந்தாலும்சரி— போராடத்தான் போகிறோம்! இதில் நாங்கள் பின்வாங்கப் போவதில்லை!

"ஆனால், மக்கள் இந்த ஆட்சிக்குத் தொடர்ந்து நல்லாதரவு தரவேண்டும். அவர்கள் இந்த ஆட்சிக்குப் பக்கபலமாக இருந்து ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

---அமைச்சர் மாதவன்

(சென்னை 66-வது வட்டப் பொதுக்கூட்டத்தில்)

பாங்கிகள்மீது சமூகக் கட்டுப்பாடு செய்யத் தயக்கமேன்?

பொறுக்குக் குழு அறிக்கையில் சி. டி. தண்டபாணி எதிர்ப்புக் குறிப்பு

புதுடில்லி, மே 6—

"ஏதேனும் ஒரு பாங்கி, ரிசர்வ் பாங்கியின் கட்டளைக்கிணங்கச் செயல்பட ஒரு தடவைக்கு மேல் தவறுமானால், அந்தப் பாங்கியை மத்திய அரசே எடுத்துக் கொள்ளலாம்"

என்று, 1967 பாங்கி சட்டத் திருத்த மசோதாவை ஆராய்ந்த நாடாளுமன்றப் பொறுக்குக் குழு தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறது.

ஏற்கனவே இந்த மசோதாவில், 'ரிசர்வ்' பாங்கியின் கட்டளையை தொடர்ந்து நிறைவேற்றத் தவறினால் அந்தப் பாங்கியை அரசு மேற்கொள்ளும்' என்று கூறப்பட்டிருந்தது.

பொறுக்குக் குழுவின் அறிக்கையில் ஏழு பேர் எதிர்ப்புக் குறிப்பு எழுதியுள்ளனர்.

கழக உறுப்பினரான திரு. சி. டி தண்டபாணி தமது எதிர்ப்புக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:—

"பாங்கிகள் மீது சமுதாயக் கட்டுப்பாடு எதுவும் இல்லாமலே இந்த மசோதா உருவாக்கப்பட்டுள்ளது. 'கட்டுப்பாடு' என்று வெறும் கற்பனை செய்து ஏமாற்றப்பட்டிருக்கிறது.

"முதலில் மசோதாவில் கூறப்பட்டிருந்த மிகக் குறைந்த அளவு நிந்தனைகளைக்கூட பொறுக்குக் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கைவிட்டுவிட்டனர்."

கல்வி வளர்ச்சியில் மாநகராட்சி காட்டும் அக்கறை

சென்னை, மே 6—

சென்னை மாநகராட்சி எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியின் விளைவாக, பள்ளி செல்லும் வயதடைந்தவர்களில் 99.01 சதவிகிதத்தினர், 1966-ஆம் ஆண்டில் சென்னை நகரப் பள்ளிகளில் கல்வி பயின்றனர்; அதாவது, அந்த ஆண்டு பள்ளி செல்லும் வயதடைந்தவர்கள் 2,92,765 பேர் இருந்தனர்; அவர்களில் 2,89,866 பேர் பள்ளிகளுக்குச் சென்றனர்.

சென்னை மாநகராட்சி மன்றத்தின 1966—67 ஆம் ஆண்டைய நிர்வாக அறிக்கையில் இந்த விவரம் தரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை மூலம் மேலும் தெரியவரும் தகவல்களாவன:—

அந்த ஆண்டில் மேலும் 15 பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன; அவற்றையும் சேர்த்து மாநகராட்சி மன்றத்தின் மொத்த பள்ளிகள் 338 ஆகும்.

எல்லாப் பள்ளிகளுமாக மொத்தம் 1,46,290 பேர் கல்வி பயின்றனர்; அவர்களில் மாணவர் 76,788 பேர்; மாணவிகள் 69502 பேர்.

இவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தோர் 36,989 பேர்.

இப்போது நான்காவது மத்திய உணவு நிலையம் சாரன்ரான்ஸ்மித் நகரில் கட்டப்பட்டு வருகிறது.

இன்னும் ஒரு வாரத்தில் அது முடிவடைந்துவிடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையத்தின்மூலம் 15,000 மாணவ மாணவியருக்கு உணவளிக்க முடியும்.

1966-67ல் நாள் தோறும் 34,493 பேருக்கு உணவளிக்கப்பட்டது.

வரி ஏய்க்கும் பணமுதலைகள் மீது வழக்குப் பதிவாம்

இந்த ஆண்டில் எட்டே பேர்கள் மீதுதான் நடவடிக்கையாம்

புதுடில்லி, மே 7—

"வருமான வரி தராமல் ஏய்ப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது"

என்று நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், மக்களவையில் தெரிவித்தார்.

"இந்த ஆண்டில், எட்டுப் பெரும் புள்ளிகள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது"

என்றும் அவர், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பஞ்சம் ஒழிய பாட்டு!

இந்தியாவில் பஞ்சமும் வறுமையும் ஒழிவதற்கு உதவி செய்ய ஜெர்மன கூட்டாட்சிக் குடியரசில் டுயிஸ்பர்க் நகரில் 'ஒரிசா கிளப்' சார்பில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு நிதி திரட்டப்படுகின்றன.

1959-ம் ஆண்டில் ஒரிசாவில் பஞ்சம் ஏற்பட்டபோது, ஒரு ஜெர்மன் பெண்மணி, 'ஒரிசா கிளப' என்ற சங்கத்தை ஆரம்பித்தார்.

ஆந்திரத்தில் கழகக் கொள்கை முழக்கம்

ஏ. பி. சனார்த்தனம், அ. பொ. அரசு, வேலூர் நாராயணன் பங்கேற்பு

விஜயவாடா, மே 8 –

"தென் மாநிலங்களை, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப் போக்கிலேயே நடத்திவருகிறது; இத்தகைய பாரபட்சப் போக்கை எல்லா மாநிலங்களும் எதிர்க்க வேண்டும்"

என்று, தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர் தோழர் ஏ. பி. சனார்த்தனம் இங்கு பேசுகையில் வற்புறுத்தினார்.

விசயவாடா நகர தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டம் ஏப். 5-ம் நாள் மாலை இங்குள்ள நியூ இண்டியா ஓட்டல் சென்டரில் சிறப்பாக நடைபெற்றது.

திருப்புரனேரி வெங்கடேசுவரராவ் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் வழக்கறிஞர் வேலூர் நாராயணன், முன்னாள் சென்னை மேயர் அ. பொ. அரசு, சி சுப்பையா ஆகியோரும் கலந்துகொண்டு பேசினர்.

வேலூர் நாராயணன்

சென்னை மாநகராட்சி மன்ற தி.மு.க. கட்சித் துணைத் தலைவரும் வழக்கறிஞருமான தோழர் வேலூர் நாராயணன் பேசுகையில் கூறியதாவது:—

"தி. மு. கழகம், 'தமிழர்களுக்காக மட்டுமே இயங்கிவரும் கட்சி' என்று தவறான ஒரு கருத்து வெளி மாநிலங்களில் நிலவிவருகிறது. தி.மு. கழகம், சாதி—மத—வகுப்பு பேதமற்ற ஓர் அரசியல் அமைப்பாகும்; இதில் எவரும் சேரலாம்.

'எல்லா இந்திய மொழிகளும் வளர வேண்டும்' என்பதுதான் கழகத்தின் விருப்பம். பிற மொழியினர்மீது இந்தி திணிக்கப்படுவதைத்தான் எதிர்க்கிறோம். இந்தி பேசும் மக்கள், மற்ற மொழியினரை இரண்டாந்தரக் குடிமக்களாகவே விரும்புகின்றனர்.

சென்னையில் உள்ள பள்ளிகளில் தெலுங்கு வகுப்புக்களை எடுத்துவிடத் தமிழக அரசு யோசித்து வருவதாகச் சில சுயநலமிகள் பிரசாரம் செய்துவருவது வருந்தத் தக்கது; அப்படிப்பட்ட யோசனை எதுவுமில்லை."

சென்னை 79-வது வட்ட பாரதிதாசன் மன்றம்

சென்னை 79-வது வட்டம் தர்காபுரம் பாரதிதாசன் மன்ற நிர்வாகிகள் தேர்தல், வட்டச் செயலாளர் கு. மு. சிறுத்தொண்டன் தலைமையில் நடைபெற்றபோது, முத்து தலைவராகவும், எஸ். கே. கிருட்டிணன் செயலாளராகவும், முகம்மது ஜான் துணைச் செயலாளராகவும், இராமச்சந்திரன் பொருளாளராகவும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 23-வது வட்ட கருணாநிதி மன்றம்

மேற்படி மன்றத் திறப்பு விழா, 21—4—68-ல் நடைபெற்றது; தோழர் என்.பி. கண்ணன் தலைமையில் வட்டக் கிளைச் செயலாளர் எஸ். என். திராவிடமணி கொடியேற்றினார்; திரு. ஜி. குசேலர் எம்.பி மன்றப் பணிமனையைத் திறந்துவைத்தார்; அமைச்சர் கருணாநிதி உருவப் படத்தை ஆர். ஆறுமுகம் எம்.சி. திறந்து வைத்து இனிப்பு வழங்கினார்.

மன்றச் சுற்றுப்புறத்தில் இருக்கும் சுமார் 300 வீடுகளுக்கும் பிரசுரமும், இனிப்பும் வழங்கப்பட்டது.

சென்னை 81-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

தோழர் பு சு. இலச்சுவன் அவர்களை ஆணையாளராகக்கொண்டு 21—4—68 அன்று நடைபெற்ற மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தலில், கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: சொ. கபிதாசன்; செயலாளர்: கோ.கங்காதரன்; துணைச் செயலாளர்: தெ. பொ. மணவழகன்; பொருளாளர்: மா. பார்த்திபன்; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 2-வது வட்டத்தில் கருணாநிதி நற்பணி மன்றம்

23—4—68 அன்று சென்னை—காசிமேட்டில் கலைஞர் மு. கருணாநிதி நற்பணி மன்றம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: மா. தட்சணாமூர்த்தி; செயலாளர்: மு. இராசு; துணைச் செயலாளர்: ம. பொன்னுரங்கம்; பொருளாளர்: மு. சித்திரை; செயற்குழு உறுப்பினர்கள்: மா. இராசு, க. பாலகிருட்டினன், க. பொன்னுரங்கம், [illegible]பத்திரன், த. நடராசன்.

காட்டூரில் கழகக் கூட்டம்

23-4-68-ல் திருவாரூர் அடுத்த காட்டூர் கீழத்தெருவில் தி. மு க. சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் கனகசுந்தரம் தலைமை வகித்தார்; தோழர்கள் சு. தென்கோவன், இராசன், அ. பெ. பால்ராசு, இராதா, மற்றும் பலர், கழக ஆட்சியின் ஓராண்டுச் சாதனைகளை விளக்கிப் பேசினர்.

கூட்டத்தில் இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்துவந்த தோழர்கள் வீராசாமி, இராமையன், இராமசாமி, சிங்காரு, சோமசுந்தரம் ஆகியோர் கழக உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டனர்.

மாலை 6 மணிக்கு பல முக்கிய இடங்களில் ஊராட்சிமன்றத் துணைத் தலைவர் கனக சுவாமிநாதன் கொடியேற்றிவைத்தார் செயலாளர் எம். ஏ. வதூத் நன்றி கூறினார்.

வள்ளியூர் எம்.ஜி.ஆர். மன்ற ஆண்டு விழா

வள்ளியூர் எம்.ஜி.ஆர். மன்ற 6-வது ஆண்டு விழா, 18-4-68-ல் தோழர் இலக்குமணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ம. செங்குட்டுவன், சங்கபாண்டி, அரிகிருஷ்ணன், நடராசன், சாமித்துரை, மகாராசன், து. சுப்பிரமணியம், நல்லரசு எம் ஏ பி.டி. ஆகியோர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறந்த பண்புகளையும், தமிழக அரசின் சாதனைகளையும் விளக்கிப் பேசினர்.

இரவு 9 மணியளவில் இராசபாளையம் மணி – சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

திருப்பூர் 9-வது வட்ட தி. மு. கழகக் கூட்டம்

திருப்பூர் 9-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் 21—4—68-ல், தோழர் கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மனோகரன், சி பழனிசாமி, மு. பழனிசாமி, கந்தசாமி பி.ஏ பி.எல்., வே சுப்பிரமணியம், கதிரேசன், பழனிசாமி பி.ஏ., இரா. முருகேசன், சு. துரைசாமி எம்.எல்.ஏ., கோவை மு. இராமநாதன் ஆகியோர் பேசினர்.

சிவகாசி நகரில் மே நாள் விழா

1—5—68 மாலை 5 மணிக்கு தெப்பத் திடலிலிருந்து அனைத்துக் கட்சிக் கொடிகளுடனும், புலிவேடம்—மற்றும் பல வேடங்களுடனும் சிலம்பு விளையாட்டுடனும், சுமார் 6,000 தோழர்கள் கலந்துகொண்ட ஊர்வலம் நகர முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று பொதுக்கூட்டத் திடலை அடைந்தது.

இரவு 7 மணிக்கு தொழிற் சங்கச் செயலாளர் எஸ். துரைசாமி தலைமையில், தோழர்கள் ஜி. ஆர். முனியாண்டி பி.ஏ.பி.எல். (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு), துரைக்கண்ணன் (தி மு.க.), சுப்பு பி.ஏ பி எல். (இடது கம்யூனிஸ்டு), மதிவாணன் (பார்வர்டு பிளாக்), மற்றும் எஸ். பி. மணியம், வே. கருணாகரன், தாடி அபுதாலிப், ஏ. எஸ். கனி, எஸ் அருணாசலம், எஸ் கே குருசாமி ஆகியோர் மே நாள் விழாவின் நோக்கமும் அதன் சிறப்புப் பற்றிப் பேசினர். தலைவர் நன்றி கூறினார்.

ஆத்தூரில் மே விழா

1—5—68-ல், சேலம்—ஆத்தூரில் தோழர் திரு. மா. சண்முகம் தலைமையில் அனைத்துத் தொழிற் சங்கங்களின் சார்பில் மே விழா நடைபெற்றது.

அனைத்துக் கட்சிகளையும், தொழிற் சங்கங்களையும் சேர்ந்த தோழர்கள் எம். பலராமன், ஏ. இராசாராம், கவிஞர் வேலாயுதம், கருமலிங்கம், பொன்னையா, ஏ. சி. சுப்பையா. ஆர். சண்முகம் சிதம்பரம், டி. கே. மாதன், ந. செ பாலசுப்பிரமணியம் ஆகியோர், மே விழா வரலாறு—தொழிலாளர்களின் முன்னேற்றம் பற்றி சொற்பொழிவாற்றினர்.

தோழர் ஆ. செயராமன் நன்றி நவின்றார்.

திருப்பூர் பனியன் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

28—4—68-ல் நடைபெற்ற திருப்பூர் பனியன் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக் கூட்டத்தில், 1968-ம் ஆண்டு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் வருமாறு:—

தலைவர்: இரா. முருகேசன் துணைத் தலைவர்: பாலசுப்பிரமணியம்; செயலாளர்: பி. எஸ் கோவிந்தசாமி; துணைச் செயலாளர்: கோ. ஆனந்தன்; பொருளாளர்: சே. பழனிச்சாமி; சட்டமன்ற உறுப்பினர் சு. துரைசாமி உள்ளிட்ட 11-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கூட்டத்தில் 1967-ம் ஆண்டின் வரவு-செலவுக் கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளை மத்திய அரசு விரைவில் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளக் கோரியும், மார்டின் லூதர் கிங் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பூரில் அனைத்துக் கட்சி தொழிற் சங்கக் கூட்டம்

திருப்பூர் அனுப்பர்பாளையம் புதூர் திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் பஞ்சாலையில் உள்ள அனைத்துக் கட்சித் தொழிற்சங்கங்களின் சார்பில் 21—4—68-ல் தோழர் பெரியசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் பொன்னுசாமி (பி சோ.), அவினாசியப்பன் (இடது கம்யூ) ஏ. கணபதி (வலது கம்யூ), இரா. முருகேசன் (தி மு.க.) ஆகியோர் பேசினர்.

துறைமுகத் தொழிலாளர் கல்வி வகுப்பு

சென்னைத் துறைமுகத் தொழிலாளர் கல்வி வகுப்புத் தவக்க விழா, கடந்த 22—4—68 அன்று டாக் லேபர் போர்டு கட்டிடத்தில் நடைபெற்றது. திரு.எம்.எஸ். வரதராசன் பி.காம். தலைமையில் திரு. எம். வேதமுத்து எம்.ஏ. துவக்கிவைத்தார்; திரு. ஜி சுந்தரராமன் எம் ஏ., சி. பாலன், எஸ். கிருஷ்ணமூர்த்தி, சாமிநாதன் ஆகியோர் பேசினர்.

சிவகாசியில் காங்கிரசார் காலித்தனம்

1—5—68 அன்று மே நாள் விழாவை முன்னிட்டு அனைத்துக் கட்சியினரின் வேண்டுகோளுக்கிணங்க நகரில் தொழிற்சாலைகள், கடைகள் யாவும் விடுமுறை விடப்பட்டன.

இதனைக் கண்ட காங்கிரசுக்காரர்கள் பொறுமையால் தூண்டிவிட்டதன் பேரில் காய்கறி வியாபாரம் செய்யும் இலட்சுமணனும், மற்றும் சிலரும் சேர்ந்து காலை 11-மணியளவில் கீழ ரத வீதியில், தொழிற் சங்கச் செயலாளர் துரைசாமியும், தி. மு. க. செயலாளர் ஏ. துரைக்கண்ணனும் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது வழிமடக்கி, 'கடைகளை மூடும்படிச் சொன்னவர்கள் நீங்கள்தானே' என்றும், 'உங்களுக்கு என்னடா மே தின விழா வேண்டியிருக்கிறது' என்றும் கேட்டு துரைசாமியின் இடது கன்னத்திலும், தோளிலும் பலமாகத் தாக்கினர்.

மேலும், நகரில் பறந்து கொண்டிருந்த அனைத்துக் கட்சி கொடிக் கம்பங்களையும் முறித்துத் தீயிட்டுக் கொளுத்தினர். இதனால் நகரில் பரபரப்பு ஏற்பட்டது. அனைத்துக் கட்சியினரும் அமைதி காத்தனர்

பெருங்களூர் பள்ளி ஆண்டு விழா

21—4—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெருங்களூர் துவக்கப் பள்ளி ஆண்டு விழா, ஆலங்குடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. வி. சுப்பையா தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, விவசாயப் பெருமக்களுக்கு ஊராட்சிகள் மூலம் தமிழக அரசு செய்துவரும் திட்டங்களைப் பற்றி எடுத்துக் கூறினார்.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய கைத்தொழில் அலுவலர் ஜி. விக்டர், கல்வி வளர்ச்சி அலுவலர் எல் எம். முருகேசன், தமிழாசிரியர் திருஞானசம்பந்தம் ஆகியோர், பெற்றோர்களின் கடமைகளைப் பற்றியும், மாணவர்களின் வருங்காலத்தைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் பரிசுகள் வழங்கினார்.

பள்ளி மாணவ-மாணவிகளால் கலை நிகழ்ச்சிகளும், நாடகமும் நடத்தப்பட்டன. திரு நடராசன் நன்றி கூறினார்.

சென்னை 47-வது வட்ட கலைஞர் கருணாநிதி படிப்பகம்

19—4—68 இரவு 8-மணியளவில் 47-வது வட்டப் பிரதிநிதி செ. கோபால் தலைமையில் மேற்படி படிப்பக உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விவரம்:—

அவைத் தலைவர்: க. முனுசாமி; செயலாளர்: வேத. நித்திய ஆனந்தம்; துணைச்செயலாளர்: பெ. காளிதாசு; பொருளாளர்: ஓ. எஸ். சீராமுலு; காப்பாளர்: சொக்கலிங்கம்; செயற்குழு உறுப்பினர்கள்: சி. கதிர்வேலு, க. சந்திரன், சு. க. முத்து, பொ. முருகேசன், கி. மு. சாமி.

சென்னை 32-வது வட்ட பொற்செழியன் மன்றம்

சென்னை 32-வது வட்ட கல்யாணபுரம் பொற்செழியன் நினைவு மன்ற நிர்வாகிகள் தேர்தல், வட்டத் துணைச் செயலாளர் பெ. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: கே. மோசஸ்; செயலாளர்: பி. எஸ். சாமி; துணைச்செயலாளர்: எம். கரிகாலன்; பொருளாளர்: டி. சாமிக்கண்ணு; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

உணர்வோர் உள்ளம்

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையம்

ஐயா,

சேலம் மாவட்டம்—வனவாசியில் ஓர் உயர்நிலைப் பள்ளி உள்ளது இங்கு 100-க்கு மேற்பட்ட மாணவர்கள் ஆண்டுதோறும் எஸ். எஸ். எல். சி. அரசாங்கத் தேர்வு எழுத வெளியூர் போவதால் பண விரயமும், கால விரயமும் ஏற்படுகிறது. வனவாசியிலேயே எஸ்.எஸ் எல் சி. தேர்வு மையம் (செண்டர்) வைத்தால், இக் குறைபாடு நீங்கும்.

ஆகவே, தமிழக அரசின் கல்வி இலாகா வனவாசிக்கு தேர்வு மையம் வைக்க ஆவன செய்ய வேண்டும்.

—ஆ. நடராசன்
தாரமங்கலம்.

சென்னை 10-வது வட்டம் கே. எஸ். அருணாசலம் நினைவு மன்றம்

4—5–68 இரவு 9-மணியளவில் சென்னை 10-வது வட்டம் வண்ணை கல்லறைத் திடல் கே. எஸ். அருணாசலம் நினைவு மன்றம்—எம். ஜி. ஆர். இரவுப் பள்ளி நிர்வாகிகள் தேர்தல் வட்டத் துணைச் செயலாளர் ந. இராசமன்னார் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்காணும் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: கே. கிருட்டினன்; செயலாளர்: பூ. முனுசாமி; துணைச் செயலாளர்: வை. தருமலிங்கம்; பொருளாளர்: ஜி. ஏழுமலை; எம். இராசு, டி. சண்முகம், வி. ஏழுமலை, ஏ நாகப்பன், எஸ். துரைக்கண்ணு ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பாசூர் முத்தமிழ் மன்றத் திறப்பு விழா

மேற்படி மன்றம் 28—4—68-ல் திறக்கப்பட்டது; திருவள்ளூர் வட்டச் செயலாளர் து. எதிராசன் கொடியேற்றி வைத்தார்.

தோழர் ஏ. கே. சாமி மன்றத்தைத் திறந்துவைத்தார்.

வழக்கறிஞர் டி. நாகரத்தினம் இனிப்பு வழங்கினார்.

தோழர்கள் திருவள்ளூர் நீடின்பன், டி. ஆர். வரதன் ஆகியோர் பேசினர்.

தோழர் ஆர். பார்த்தசாரதி தலைமைதாங்கினார்.

மன்றச் செயலாளர் எல். முருகேசன் நன்றி நவின்றார்.

கிராம வானொலி மன்றத் துவக்க விழா

21—4—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த புதுக்கோட்டை விடுதி கிராமத்தில் ஆலங்குடித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கே வி. சுப்பையா பி ஏ. தலைமையில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம், கிராம வானொலி மன்றத்தைத் துவக்கி வைத்து, விவசாயிகளுக்குக் கிராம வானொலி மன்றம் மூலம் கிடைக்கும் நன்மைகளைப்பற்றி விளக்கினார்.

புதுக்கோட்டை கோட்டப் பொறியாளர் எம். டி. பால் மாணிக்கம் பி.ஏ பி.ஈ., திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய சேரணித் தலைவர் பெரியண்ணன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மறைவு

உடுமலை வட்டம் வெங்கடேசா ஆலை திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் துணைச்செயலாளர் கே. சின்னப்பன், தோழர் கே. மணி ஆகியோரின் தந்தையார் 25-4-68 அன்று இயற்கையெய்தினார் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது. அன்னார் குடும்பத்துக்கு தி. ப. தொ. மு. சங்கச் சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

சமதர்மச் சமுதாய அமைப்பே

கழக அரசின் இலட்சியம்!

சென்னை, மே 8—

"திராவிட முன்னேற்றக் கழகம் பதவியேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில், பல கோடி ரூபாய் செலவில் பல விவசாயக் கிடங்குகளையும், குடிநீர்த் தொட்டிகளையும், புதிய பள்ளிகளையும், இதைப் போன்ற இன்னும் பல சமுதாயத் திட்டங்களையும் நிறைவேற்றியுள்ளது!

"கிராமங்களின் முன்னேற்றத்திற்காகக் கழக அரசு, பெரும் அளவில் அக்கறை செலுத்துகிறது! 'நகரத்திற்கும்—கிராமத்திற்கும் உள்ள வேறுபாடு நீங்கவேண்டும்' என முயற்சி செய்கிறது!

"சமதர்மச் சமுதாயத்தை உருவாக்குவதுதான் கழக அரசின் கொள்கை! ஏழை மேலும் ஏழையாவதையும், பணக்காரன் மேலும் பணக்காரனாவதையும் இந்த ஆட்சி ஒரு போதும் சகித்துக்கொள்ளாது! இந்த ஏற்றத் தாழ்வைப் போக்கிட அண்ணாவின் அரசு முழு முயற்சி செய்யும்!

"ஏழைகள் குடியிருப்பதற்கு மனைக்கட்டும், சாகுபடி செய்ய நிலமும் வழங்க இந்த அரசு முயற்சி செய்யும்!

"இன்று நான் வரும்போது, 'திரும்பிப் போ' என்று சில காங்கிரசார் கறுப்புக்கொடி காட்டினார்கள்; இவர்கள் சொல்வதனாலே நான் திரும்பிப் போகப் போவதுமில்லை; இவர்கள் அழைப்பதனால் நான் வரப்போவதுமில்லை; என் கடமையைச் செய்ய வருகிறேன்--கடமை முடிந்ததும் செல்கிறேன்.

' ஏழை ஆதித் திராவிட மக்களுக்கு—இருபதாண்டுக்காலமாகக் குடிப்பதற்கு நல்ல நீர் இல்லாது கஷ்டப்பட்ட மக்களுக்கு, குடிநீர்த் தொட்டிகளைத் திறந்துவைக்க வந்திருக்கிறேன்; 'இதைத் திறக்கக்கூடாது' என்பதுபோல் காங்கிரசார் நடந்து கொள்கின்றனர்! நல்ல காரியம் செய்ய வரும்போது, 'அபசகுனம்' மாதிரி கறுப்புக்கொடி பிடித்துக் கொண்டு எதிரே நிற்கிறார்கள்!

"கறுப்புக் கொடி காட்டும் காங்கிரசுக்காரர்களுக்கும்—காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை' என்று தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியமே சொல்லிவிட்டார்! 'இதிலிருந்தே 'கறுப்புக்கொடி காட்டும் இவர்கள் யார்?' என்று நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்!

"இருபதாண்டுகளாகப் பதவியிலிருந்தவர்கள் பதவியிலிருந்து விரட்டப்பட்டதும், பிற்போக்கான செயல்கள் அனைத்திலும் ஈடுபடுகிறார்கள்!

"எங்களுக்கு இந்த அமைச்சர் பதவி பெரிய 'தகுதி' எதனையும் கொடுத்துவிடவில்லை. இந்தப் 'பதவி' இல்லையென்றால், நாங்கள் ஒன்றும் முகவரி தெரியாதவர்களாகிவிடமாட்டோம்!

"ஏழைகளுக்கு நன்மை செய்வதற்குரிய கருவியாகத்தான் இந்தப் பதவியை நாங்கள் கருதிக்கொண்டிருக்கிறோம்! இந்தப் பதவியால் ஏழைமக்களுக்கு நன்மை செய்ய முடியாத நிலை ஏற்படுமானால், இப்பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு உங்களில் ஒருவராக உங்களுடன் வந்துவிடுவோம்!"

—உணவு அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

(செங்கற்பட்டு மாவட்ட சமுதாய நலத் திட்டப் பணியின் நிறைவு விழாவில்)

செத்த காங்கிரசுக்குப் புத்துயிரூட்ட ...!

ஆந்திரத்தில் கையாளும் அராஜகச் செயல்கள்

தலைமையமைச்சரிடம் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் முறையீடு

புதுடில்லி, மே 7—

"ஆந்திரத்தில் பெரிய நிலப் பிரபுக்களும், கொழுத்த வணிகர்களும், பழங்குடி மக்களைக் காங்கிரசுக் கட்சியில் சேரும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்; இப்பிரச்சினையில் தலைமையமைச்சர் குறுக்கிட்டு உடனே இச்செயலை நிறுத்தவேண்டும்"

என்று ஆந்திரக் கம்யூனிஸ்டுத் தலைவர் திரு. சுந்தரய்யா, தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

"பழங்குடி மக்களைக் காங்கிரசுக் கட்சியில் சேரும்படி உத்தரவிடுவதுடனன்றி, 'காங்கிரசுக் கட்சிக்கு நிதி உதவி செய்ய வேண்டும்; காங்கிரசுக் கொடிகளைத் தங்களின் குடிசைகளின்மீது பறக்கவிட வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தி வருகிறார்கள்; இவ்வாறு செய்யாவிடில் பழங்குடி மக்களின் குடிசைகள் போலீசாரிடம் ஒப்படைக்கப்படும்' எனவும் நிலப் பிரபுக்களும் வணிகர்களும் மிரட்டியுள்ளனர்"

என்று சுந்தரய்யா, அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இவ்வளவும் செய்த பிறகும் அந்தக் காங்கிரசுக்காரர்கள், பழங்குடி மக்களை விடவில்லை; அவர்களை அடித்துத் துன்புறுத்தினர்; கொடுமைகள் இழைத்தனர்; வீடுகளைச் சூறையாடினர்; பெண்களைக் கற்பழித்தனர்"

என்றும் சுந்தரய்யா, அக்கடிதத்தில், போலீசு மீதும், காங்கிரசு நிலப் பிரபுக்கள் மீதும் வரிசையாகக் குற்றப்பட்டியலை வெளிப்படுத்திக் குறிப்பிட்டிருக்கிறார்.

"அப்பாவிகளான பழங்குடி மக்களை இப்படியெல்லாம் காங்கிரசுக்காரர்கள் கொடுமைப்படுத்துவதிலிருந்து தடுத்து நிறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்"

என்று தலைமை அமைச்சரை அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

காமராசர்--பக்தவத்சலம் காலத்தில்...

தூக்கியெறியப்பட்ட சனநாயக உரிமை

அண்ணா ஆட்சியில்தான் சிறப்பிடம் பெற்றது!

சென்னை, மே 7—

"நாங்கள் முன்பு கறுப்புக்கொடி காட்டும்போது மாநில அமைச்சர்களுக்குக் காட்டியதில்லை. திட்டமிட்டு—பத்திரிகைகளிலே எல்லாம் அறிக்கை கொடுத்து—முறையாகக் காட்டினோம்!

"சுப்பிரமணியம் சொல்லுகிறார்—'தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி இதனைச் செய்யவில்லை' என்று; ஆனால், நடக்கும் கறுப்புக்கொடி போராட்டத்தைப் பார்த்தால், அந்தந்த இடத்தின் காங்கிரசுப் பொறுப்பாளர்கள்—பத்து இருபது பேர்களுடன்—கறுப்புக்கொடியைப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள் என்பது நன்கு தெரிகிறது!

"இதைக் கண்டு நாங்கள் மிரளவில்லை—மகிழ்ச்சியடைகிறோம்! 'கறுப்புக் கட்சி—கறுப்புக் கட்சி' என்று கூறி, 'கறுப்பையே கண்ணால் பார்க்க மாட்டோம்' என்று கூறியவர்கள், 'அந்த கறுப்புக்கொடியையே தூக்கிப்பிடித்து நிற்கும் நிலை வராதா' என்று ஏங்கியவர்களாயிற்றே நாங்கள்!

"அப்படி இருக்கும்போது, 'அதைப் பிடித்துக்கொண்டே நம்மை எதிர்க்கிறார்களே என்று நாங்கள் ஒன்றும் அஞ்சிவிடப் போவதில்லை!

"அவர்களது வாய் மட்டும் 'திரும்பிப் போ—திரும்பிப் போ' என்று சொன்னாலும், அவர்களது கரத்திலுள்ள எங்கள் கொடியின் பாதி, எங்களை, 'வா, வா' என்றல்லவா அசைந்து ஆடி வரவேற்கிறது!

"இதில் இன்னொரு விசித்திரம் என்னவென்றால், காங்கிரசுக்காரர்களின் கொடியைப் போன்ற நாட்டுக் கொடியை எங்களது காரில் பறக்கவிட்டுக்கொண்டு செல்லுகையில் அந்தக் கொடிக்கே கறுப்புக் கொடி காட்டுவது, தூரத்தில் இருப்போருக்கு, 'காங்கிரசுக் கொடிக்குக் காங்கிரசுக்காரர்களே கறுப்புக் கொடி காட்டுகிறார்களே' என்ற எண்ணத்தைத் தான் எழுப்பும்!

"ஆட்சிக் கட்டிலில் காமராசர் அமருவதற்கு முன்னர், முந்நூறு கெச தூரத்தில் இருந்து கொண்டு, கறுப்புக் கொடி காட்டித் தங்களது உணர்ச்சிகளைக் காட்டும்படி வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் காமராசர் வந்தவுடன், அந்த உரிமை நசுக்கப்பட்டது! கறுப்புக் கொடி காட்டவிருந்த தலைவர்களும், முக்கியமானவர்களும் முதல் நாளிரவே கைது செய்யப்பட்டனர்! கறுப்புக் கொடி காட்ட வரும் தோழர்களும் நசுக்கப்பட்டனர்!

"காமராசரால் 1954-ல் தூக்கி எறியப்பட்ட இந்த சனநாயக உரிமை, பக்தவத்சலம் காலத்திலும் அதே கதிதான்! ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள்தான் இந்தத் தடையை உடைத்தெறிந்தார்! தனி இடமும், தனிப் பாதுகாப்பும் தந்து அவர்களது உணர்ச்சிகளை வெளியிடவகை செய்தவர்—வழிகண்டவர் அண்ணா!"

—கல்வி, தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

(சென்னை 10-வது வட்டப் பொதுக்கூட்டத்தில்)

திருமணம்

சென்னை 25-வது வட்ட எம்.ஜி. ஆர். மன்றப் பொருளாளர் தோழர் து. கண்ணனுக்கும்—தோழியர் செல்லம்மாளுக்கும் 10—5—68 காலை 9-மணிக்கு, சென்னை—குமரப்ப முதலி தெரு, மோகனகிருஷ்ண திருமண மண்டபத்தில், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; தோழர்கள் என் வி. நடராசன் எம் எல்.சி., சி பி. சிற்றரசு எம்.எல் சி., க. அறிவழகன் எம்.எல்.சி., எம். ஆர். கண்ணன் எம். எல். ஏ., ஏ. செல்வராசு எம்.சி., என். ஆர் வீரஜின்னு ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மறைமலையடிகள் விழா

மறைமலையடிகள் 17-ஆம் ஆண்டு நினைவு விழாவும், 'திருவாசக ஒளி நெறி'—'ஆட்சி முறைத் தமிழ்' வெளியீட்டு விழாவும்; 10—5—68 மாலை 6-மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில்; தலைவர்: அமைச்சர் மா. முத்துசாமி; பேசுவோர்: மு. ரா. பெருமாள் (முதலியார்), யோகி சுத்தானந்த பாரதியார் முதலியோர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மே 4, 5.ம் நாட்களில் நடைபெற்ற

சிற்றூர்- பேரூர்; நகர--பெருநகர உட்கிளைத் தேர்தல்

முக்கிய அறிவிப்பு

மே 4, 5 ஆகிய நாட்களில் நடைபெற்ற சிற்றூர்—பேரூர்; நகர—பெருநகர உட்கிளைத் தேர்தல்களில் போட்டியிட்ட கழகத் தோழர்கள், அவரவர் விண்ணப்பத் தாளுடன் செலுத்த வேண்டிய தொகை பற்றித் தலைமைக் கழகம் தெளிவாக அறிவித்திருக்கிறது.

என்றாலும், தேர்தல்களில் போட்டியிட்ட செயற்குழு உறுப்பினர்களிடமிருந்து உரிய கட்டணமான ரூ. 1 வசூலித்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்புவதற்குச் சில கிளைகள் தவறியிருக்கின்றன.

கிளையின் தேர்தல்களில் எந்தப் பொறுப்புகளுக்கானாலும் – கிளையின் அலுவலாளர்கள், பிரதிநிதிகள், செயற்குழு உறுப்பினர்கள் ஆகிய எந்தத் தேர்தல்களுக்கானாலும் – போட்டியிடும் தோழர்கள் ஒவ்வொருவரும் ரூ. 1 கட்டணமாகக் கட்டாயம் செலுத்தவேண்டும் என்பது முறை.

ஆகவே, செயற்குழு உறுப்பினர்த் தேர்தலில் போட்டியிட்ட தோழர்கள் செலுத்தவேண்டிய தொகையைப் பெற்று தலைமைக் கழகத்திற்கு அனுப்பத் தவறிய கிளைகள், உடனடியாக செயற்குழு உறுப்பினர்களுக்கான தொகையையும் (தேர்தலின் போது அவர்களிடமிருந்து பெறத் தவறியதை அவர்களுக்கு எடுத்துக்காட்டி வசூலித்து) உடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி செயற்குழு உறுப்பினர்கள் தேர்தல்களை உறுதிசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பாகிஸ்தானுக்குப் பதிலடி!

மக்களவையில் உறுப்பினர் வற்புறுத்தல்

புதுடில்லி, மே 7—

"'பதிலுக்குப் பதில்' என்ற அடிப்படையில் அமைந்துள்ள கொள்கையை நாம் பின்பற்ற வேண்டும்; இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும்"

என்று மக்களவையில், உறுப்பினர்கள் பலர் கோரியுள்ளனர்.

பாகிஸ்தானிலுள்ள இந்தியக் கம்பெனி ஒன்றுக்குச் சொந்தமான சில ஓட்டல்களை, 'பகைவர் சொத்து' என பாகிஸ்தான் அரசு அறிவித்திருப்பதை, வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங் உறுதிப்படுத்துகையில்தான், மக்களவை உறுப்பினர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

'பாகிஸ்தான் எடுத்துள்ள நடவடிக்கையை இந்தியா பலமாக எதிர்த்திருக்கிறது" எனக் கூறிய அமைச்சர், 'பதிலுக்குப் பதில்' என்ற வகையில் நடவடிக்கை எடுப்பதற்கில்லை; இந்தியா ஏற்கனவே உறுதியான கொள்கையைப் பின்பற்றி வருகிறது' என்றார்.

ஜி. டி. நாயுடு வீடுகள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எனவே, 'நிபுணர்கள் கருத்து' என்ற பெயரால், ஜி.டி. நாயுடுவின் வீடு கட்டும் திட்டத்தைத் தட்டிக் கழிக்க முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது!

நாடாளுமன்ற மேலவையில், வீட்டுவசதித்துறைத் துணையமைச்சர் நாடாளுமன்ற மேலவையில் திரு. இக்பால்சிங் தெரிவிக்கையில் கூறியுள்ளதாவது:—

"நிபுணர்கள் இந்த வீடுகளை ஏற்றுக்கொள்ளவில்லை; 'அடிமனை மலிவாகக் கிடைக்கும் இடங்களில்தான் இந்த வீடுகளைக் கட்டுவது பயனுள்ளதாக இருக்கும்; டில்லியில் ஜி. டி. நாயுடு வீடுகளுக்குச் செலவிடும் தொகையைக்கொண்டே இன்னும் நல்ல முறையில் வீடு கட்ட முடியும்' என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்."

"மத்திய அமைச்சரவையில் உள்ள பல அமைச்சர்கள் ஜமீன்தார் பாணியில் விருப்பமுடையவர்களாக இருந்துவருகிறார்கள்" என்று அண்மையில் குற்றஞ்சாட்டப்பட்டது நினைவிருக்கலாம்.

அப்படிப்பட்ட ஜமீன் நோக்கினருக்கு, சாதாரண 'மலிவுக் குடில்கள்' எப்படிப் பிடிக்கும்? அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜி. டி. நாயுடுவின் யோசனைக்கா அவர்கள் மதிப்பளிப்பார்கள்?